1979 மார்ச் 6] [திரு. ச. இராமச்சந்திரன்]

வெளியிடுவதற்கு இடையூறாக இருக்க வேண்டும் என்று கருத வில்லை. சில தகவல்களின் பேரில் நடவடிக்கை எடுக்கப் பட்டதே தவிர வேறு அல்ல. அந்த நடவடிக்கை எந்த இயக் கத்தையும் கட்டுப்படுத்துவதற்காக அல்ல. மக்களின் உயிருக்குப் பாதுகாப்பு தரவேண்டும் என்ற முன்னெச்சரிக்கையாக நடத்தப் பட்ட நடவடிக்கைதான் இது. நிச்சயமாக அரசாங்கம் அவர்களை அதிக நாள் வைத்திருக்கப் போவதில்லை. அரசு நிச்சயமாகக் காலம் கருதி தக்க நடவடிக்கை எடுக்கும் என்று கூறி, இந்த அவையின் இதர அலுவல்களைத் தள்ளி வைத்து இது குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இது குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்ற காரணத்தால் அனுமதி மறுக்கப்படுகிறது.

திரு. ப. பொன்னுரங்கம் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் ஒத்தி வைப்புத் தீர்மானம் மீது அமைச்சர் பதில் அளிக்கும்போது கொல்லப் பட்டு செத்தவர் நக்சலைட்டுகளால் கொல்லப்பட்டு இருக் கலாம் என்று சந்தேகப்படுவதாகக் குறிப்பிட்டார்கள். ஆனால் அவர்களே போட்ட அந்த துண்டு அறிக்கையில் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி எதுவும் சொல்லவில்லை. அதற்கு மாறாக, ஏ.டி.எம்.கே., காங்கிரஸ், சி.பி.ஐ., பற்றி....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்தி வைப்புத் தீர் மானத்தின் போது நேற்று சொன்னதை வைத்து இப்போது எழுப்புவது ஒழுங்குப் பிரச்சினை அல்ல.

(ஆ) விருகம்பாக்கம் காவல் நிலையத்தில் ஓர் வழக் கறிஞர் நடத்தப் பெற்ற முறை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1–3–79 அன்று சென்னை யைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு. ரத்னாகரன் என்பவர் விருகம் பாக்கம் போலீஸ் நிலையத்திற்கு வழக்கு சம்பந்தமாகச் சென்ற போது, அவரைப் போலீசார் இழித்தும் பழித்தும் பேசி அவர் மீதே ஒரு வழக்கு பதிவு செய்துள்ளதால் சென்னையில் உள்ள வழக்கு மன்றங்கள் நடக்க இயலாமல் இருப்பதோடு, வழக் கறிஞர்கள் வழக்கு மன்றம் செல்லாது புறக்கணிப்பதால் நாட்டில் நீதித் துறையில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க

வேண்டுமென்று கேட்டு திரு. துரைமுருகன் ஒரு தீர்மானம் கொடுத்துள்ளார். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். திரு. துரைமுருகன்.

*திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, நேற்று கூட இந்த அவையில் இத்தகைய ஒரு நிகழ்ச்சி வந்து, அந்த ஒத்திவைப்புத் தீமானத்தின் மீது அமைச்சர் பதில் அளித்து இருக்கிறார்கள். ஆனால் நாட்டில் விரும்பத்தகாத அந்த நிகழ்ச்சி தொடர்ந்து நடைபெறுமானால் அது ஒரு பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தும். இந்திய அரசியல் சட்டத்தில் கூட்டாட்சித் தத்துவம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, செபரேஷன் ஆப் பவர்ஸ் என்று சொல்லக்கூடிய, லெஜிஸ்லேச்சர், எக்சிகியூட்டிவ், ஜுடிசியரி என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒன்றுக்கொன்று இணையாக நின்று, யார் அதிகமாக அதிகாரங்களை வைத்து இருக்கிறார்கள் என்கிற விவாதம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. சட்டமன்றம் பெரிதா, நீதிமன்றம் பெரிதா எது சாவரின் பவர்ஸ் உள்ளது என்ற பெரிய பிரச்சினை யு.பி. மாநிலத்தில் எழுந்தது என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் நிர்வாகத்திற்கும் நீதிமன்றத்திற்கும் இடையே தகராறு ஏற்பட்டால் நாட்டிலே ஜனநாயகம் செத்துப் போகும் என்பதற்கு பல்வேறு அத்தாட்சிகள் இருக்கின்றன.

(முற்பகல் 10-20).

எனவே தான் சட்ட மன்றம் பிறப்பிக்கின்ற சட்டத்தை சரியல்ல என்று சொல்லும் அதிகாரம், நிர்வாகம் போடுகிற திட்டத்தை சரியல்ல என்று சொல்லுகின்ற அதிகாரம் நீதிமன்றத்திற்கு இருக்கிறது. எனவே, நீதி மன்றத்தைக் காப்பாற்ற வேண்டியது நம்முடைய பொறுப்பு. நீதி சில நேரங்களில் இருட்டறையில் இருக்கும். சட்டம் என்பது ஒரு இருட்டறை,; அதிலே வாதம் என்பது ஒளி விளக்கு என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரத்னாகரனுக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் ?

திரு. துரைமுருகன் : இன்றைக்கு வழக்கறிஞர்கள் அந்த ஒளியை கையிலே ஏந்தியிருக்கிறார்கள். அந்த ஒளி விளக்கை ஏந்திய மணிக்கரத்தை அடித்து நொறுக்கியிருக்கிறது இன்றைக்கு போலீஸ் இலாகா என்பதை நான் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். நண்பர் துரை முருகன் பேசும்போது நீதிமன்றத்திற்கும் சட்ட மன்றத்திற்கும் என்று பிரச்சினையைக் கிளப்பினார்கள். தாங்

1979 மார்ச் 6] [திரு. எஸ். ஜே. இராமசாமி]

கள் கவனித்திருப்பீர்கள் என்று நினைத்தேன். அதை தடுத்து நிறுத்தியிருக்க வேண்டும். ஆனால் 'சுப்ரீம்' எது என்பதை தாங்கள் முடிவு செய்ய வேண்டும்.

திரு. துரை முருகன் : அது உத்தர பிரதேசத்தில் நடந்தது இது அரசியல் பிரச்சினை இது அவருக்கு தெரியாது. வழக்கறிஞரைத் தாக்குவது என்பது சாதாரணமானது அல்ல. இன்றைக்கு போலீஸ் இலாகாவினர் 'ஆட்டை அடித்து, மாட்டை அடித்து, மனிதனை அடிக்கும்' என்பார்களே, அதைப் போல எதிர்க் கட்சிக்காரர்களை அடித்து, ஆசிரியர்களை அடித்து, மாணவர்களை அடித்து, பிறகு தொழிலாளர்களை அடித்து, இன்றைக்கு நீதியின் நெடிய படிகளிலே ஏறி நின்று நியாயத்திற்குப் போராடுகின்ற, கறுப்பு அங்கி அணிந்திருக்கின்ற வழக்கறிஞர்களை கவ்விப்பிடிக்கின்ற அளவுக்கு போலீஸ் இலாகா துரத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னால் இந்த சர்க்காரை நான் எச்சரிக்கிறேன். நீதி மன்றத்திலே இருந்து நீதி வழங்குகின்ற நீதிபதிகளையும் இந்த போலீஸ் இலாகா தாக்கும் காலம் வெகுவிரைவில் வந்துவிடும் என்பதை எச்சரிகையாக சொல்ல விரும்புகிறேன். காரணம், இன்றைக்கு போலீஸ் இலாகாவின் நடவடிக்கைகள் அந்த அளவிற்க்கு போய்க் கொண்டிருக்கின்றன. அந்த அளவிற்கு அவர்கள் செயல்படுகிறார்கள். (மணியடிக்கப்பட்டது) முடித்துவிடுகிறேன். பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி நடைபெறுகிறது. அங்கே ஒரு வக்கில் தாக்கப்பட்டாரா? இடி அமின் ஆட்சியிலே ஒரு வழக்கறிஞர் தாக்கப்பட்டதுண்டா? ஏன் சட்ட ஆட்சி 19 மாத இருண்ட ஆட்சியில் ஒரு வழக்கறிஞர் கைது செய்யப்பட்டாரா? இத்தகைய நிலையில் நடக்கிறது. என்று சொல்லுகின்ற உங்களுடைய ஆட்சியிலேதான் இன்றைக்கு வழிக்கறிஞர்கள் தாக்கப்படுகின்றார்கள். இது ஒரு துர்பாக்கியமான நிலைமை. இதை தடுத்து நிறுத்த வேண்டும் இதை தடுத்து நிறுத்த, அரசு தலையிட்டு, ஆவன புரிந்து இத்தகைய நிகழ்ச்சிகள் மீண்டும் நடக்காமல் இருக்க, இந்த நாட்டில் நீதியை பாதுகாக்க எல்லா உறுப்பினர்களின் கருத்துக்களையும் கேட்டறிய சபையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும். புரோகிதர் மந்திரம் ஓதியதற்கு பின்னாலே புண்ணியதானம் அளிப்பதைப் போல அமைச்சரின் விளக்கத்திற்குப் பின்னால் ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று வழக்கமாகச் சொல்லும் தீர்ப்பைச் சொல்லாமல், இது ஒரு ''கான்ஸ்டிடியூஷனல் கிரைசிஸ்'' ஆக வந்திருக்கிறது என்ற காரணத்தால் சபையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இந்தப் பிரச்சனை குறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் அவர்கள் நேற்று பேசவேண்டியதை இன்றைக்குப் பேசியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இந்தப் பிரச்சனை நீதிக்கும் நிர்வாகத்திற்கும் சம்பந்தப்பட்டதல்ல. இந்தப் பிரச்சனையிலே ஏற்பட்

டிருக்கின்ற குழப்பம் இது காதலா அல்லது கடத்தலா என்பது தான். எப்படி என்றால், 1—3—1979 அன்று இரவு 10-30 மணிக்கு திரு. சிவராமன் அவர்கள் மனைவி பிச்சையம்மாள் ஒரு புகார் கொடுத்தார். அவர் 9 பேர்கள் மீது புகார் கொடுத்திருக்கிறார்.

(1) ரமேஷ்குமார்

(2) கணேஷ் குமார்

(3) வீரப்பன்

(4) சோணமுத்து

(5) இராதாகிருஷ்ணன்

(6) சிவராஜ்

(7) இரத்னாகரன்— இவர்தான் சம்பந்தப்பட்ட வழக்கறிஞர்.

(8) குணா

(9) சுரேஷ்.

அந்தப் புகாரில் மேற்கண்ட 9 பேர்களும் சிவராமன் என்பவரிடம் வந்து அவருடைய மகள் கீதா எங்கே என்று 1— 3— 1979 அன்று இரவு சுமார் 9 மணிக்கு கேட்டார்கள். அவர் தெரியாது என்று சொன்னவுடன் எதிரிகள் அவரையும் அவருடைய மகன் சுப்பிரமணியத்தையும் எம். எஸ். ஆர். 1733, எம். எஸ். ஆர். 2670, ஆகிய வாடகைக் கார்களில் கடத்திச் சென்று விட்டார்கள். கடத்திச் சென்று திரு. சிவராமன் என்பவரைத் தாக்கியிருக்கிறார்கள்.

அவருடைய மைனர் பெண் கீதாவை ரமேஷ்குமார் என்பவருக்கு மணம் முடித்து வைக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தியிருக்கிறார்கள். இதெல்லாம் அவர்களுடைய புகாரில் இருக்கிறது. திரு. சிவராமன் தாக்குதல்களைத் தாங்கமாட்டாமல், திரு. ரமேஷ்குமாரின் தந்தை ஒய்வு பெற்ற துணைச்காவல் அதிகாரியாயிருந்த நமசிவாயம் முன்னால் திருமணத்திற்குச் சம்மதத்தைத் தெரிவிப்பதாகக் கூறியவுடன், எதிரிகள் திரு. சிவராமன் என்பவருடன் திரும்பி வரும்போது சாயிநகர் அருகே போலீஸாரால் கைது செய்யப்பட்டார்கள். கைதானவர்களில் எதிரி எண். 7 திரு. ரத்னாகரன் என்பவர் ஒரு வழக்கறிஞர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் திரு. ரமேஷ்குமார், சன் ஆப் திரு. நமசிவாயம், சொல்வது படிப்பார்த்தால் திரு. சிவராமன் என்பவருடைய மகளான கீதாவை திரு. ரமேஷ்குமார் காதலித்ததாகவும் பின்னர் திரு. சிவராமன் இவர்களுடைய திருமணத்திற்கு ஒப்புக் கொள்ளாததால் இச்சம்பவம் நடைபெற்றிருப்பதாகத் தெரிகிறது.

வழக்கறிஞர் திரு. ரத்னாகரன் 2— 3— 1979 அன்று நிபந்தனைக்குட்பட்ட ஜாமீனில் வெளி வந்திருக்கிறார். மற்றவர்கள் ஜாமீனில் வெளிவர நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே, இதில் கண்டறிய வேண்டியது என்னவென்றால், நடந்திருப்பது கடத்தலா, காதலா என்பதுதான். இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணையில் இருக்கிறது. ஆகவே இது குறித்து அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லை என்ற காரணத்தால் அனுமதி மறுக்கப்படுகின்றது.

(இ) மின் இணைப்புத் துண்டிக்கப் பெறுவதால் விவசாயிகள் பாதிக்கப்பெறுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து ''கோவை மாவட்டம் பெரிய நாயக்கன்பாளையத்தில் விவசாயிகள் மின் இணைப்பைத் துண்டித்ததால் பயிர்கள் காய்ந்து வீணாவதாலும் அவர்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்'' என்று கேட்டு திரு. ஆ. நடராசன், திரு. பெ. சு. திருவேங்கடம், திரு. சோ. அழகர்சாமி, திரு. பொ. உத்திராபதி, திரு. செ. சிவசாமி, திரு. கே. கந்தசாமி ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்து உள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. ஆ. நடராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் பெரிய நாயக்கன் பாளையத்திலுள்ள விவசாயிகளின் மின் இணைப்புக்களை துண்டித்திருக்கிறார்கள். வருவாய்த் துறை அதிகாரிகளும், காவல் துறை அதிகாரிகளும் சேர்ந்து சென்று மின் இணைப்புகளைத் துண்டித்திருக்கிறார்கள். இவ்வாறு மின் இணைப்புகளைத் துண்டிப்பதற்குக் காரணம் என்னவென்றால் விவசாயிகள் சங்கம் கடந்த காலத்திலே நடத்திய போராட்டத்தின் விளைவுதான். ஆயிரக்கணக்கான விவசாயிகள் மின் கட்டணம் செலுத்தாமல் இருந்து வருகிறார்கள். அதன் காரணமாக இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறது என்கிற வகையில் 41 விவசாயிகளுடைய மின் இணைப்பைத் துண்டித்திருக்கிறார்கள், இந்தத் துண்டிப்பினால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. 41 விவசாயிகளின் பிரச்சினையாக இதைக் கருதாமல் ஒரு போராட்டத்தை அடக்க வேண்டும் என்கிற அடிப்படையில் இன்றைய தினம் அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் மூலம் ஏராளமான நிலங்கள் பாதிக்கின்ற நிலைமை ஏற்படக் கூடும். ஏறக்குறைய 25 ஆயிரம் பேர் இன்றையதினம் மின் கட்டணத்தைக் கட்டாமல் இருக்கிறார்கள். அதிலே கிட்டத்தட்ட 2 கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு வரவேண்டியிருக்கிறது. கடந்த பல மாதங்களாக உயர்மட்டக் குழு போடப்பட்டும்